(89)

*சாக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்*
*முன்னிலை திரு.பா.இளங்கோ*

ந.க.ப்பி2/190/18 நாள்: 28 .02.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு திட்டம் 2017- சிவகங்கை மாவட்டம் - சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - சங்கராபுரம் ஊராட்சி கழனிவாசல் கிராம் நில அளவை எண்: 79/2a-ல் 28150 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (A.VR.A Residency) அனுமதியற்ற குடியிருப்பு மனையினை விற்பனை செய்ய அனுமதித்து - உத்தரவிடல்

பார்வை:
1.சிவகங்கை நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்1956/17/சிம-4 நாள் : 09.01.2018
2.அரசாணை நிலை எண்: 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ4(3) நாள்: 13.10.2017
3.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்: 08.02.2018
4.திருமதி.வி.மரகதவள்ளி, க/பெ. ஆர்.வீரப்பன், காரைக்குடி கடிதம் நாள்: 27.02.2018

---------

பார்வை 1-ல் கண்ட சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) அவர்களின் செயல்முறையின்படி சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் சங்கராபுரம் ஊராட்சி கழனிவாசல் கிராம் நில அளவை எண்: 79/2a-ல் 28150 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (A.VR.A Residency) இடத்திற்கு ஊராட்சி வளர்ச்சி கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு 25 வீதம் 6285.77 சதுர மீட்டருக்கும் மொத்தம் ரூ.157144/-ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நூற்றி நாற்பத்து நான்கு மட்டும்) 16.02.2018ல் சங்கராபுரம் ஊராட்சியில் செலுத்தப்பட்டுள்ளதும் மேலும் அரசு தலைப்பில் ரூ.188575/- (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்து எட்டாயிரத்து ஐந்நூற்று எழுபத்து ஐந்து மட்டும்) செலுத்தப்பட்டுள்ளது. எனவே விற்பனை செய்யப்படாத மனை இடங்களை ஒவ்வொரு மனைக்கும் (Plan aprovel) தனிதனியாக ஊராட்சியில் இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ளவும், மேலும் பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட சாலைகள் மற்றும் இடங்களை மேதகு தமிழக ஆளுநர் பெயரில் பத்திரப்பதிவு செய்யப்பட்டதனை தொடர்ந்து மேற்படி மனை இடங்களை விற்பனை செய்வதற்கு ஊராட்சிக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
சாக்கோட்டை
28.2.18

பெறுநர்:
திருமதி.வி.மரகதவள்ளி,
க/பெ. ஆர்.வீரப்பன்,
காரைக்குடி

நகல் சமர்ப்பித்தல்:
நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், சிவகங்கை

நகல்: ஊராட்சி செயலர், சங்கராபுரம் ஊராட்சி

AL-Periya Kathams,
PR. Sivagami
PR. Alagu Sundaram

73

RPAD

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) சிவகங்கை அவர்களின்

நடவடிக்கைகள்.

*முன்னிலை: திருமதி. இரா. காவியம் டி.சி.இ.,*

ந.க.எண்: 1956/2017/சிம-4 நாள்: 09.01.2018

பொருள்: நகர் ஊரமைப்பு – சிவகங்கை மண்டலம் - சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி வட்டம் - சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - சங்கராபுரம் ஊராட்சி - கழனிவாசல் கிராமம் - நில அளவை எண்:79/2A-இல் 28150.00சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (A.VR.A Residency) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்துதல் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்: 78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (ந.வ4(3) நாள்: 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்: 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (ந.வ4(3) நாள்: 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2 நாள்: 30.10.2017 மற்றும் 07.11.2017.
4. வட்டார வளர்ச்சி அலுவலர், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் ந.க.எண்:பி2/2775/2016 நாள்:11.09.2017.
5. மனுதாரர் திருமதி. V. மரகதவள்ளி அவர்களின் விண்ணப்பம் நாள்: 11.09.2017.

******

**உத்தரவு:**

பார்வை 1 மற்றும் 2-இல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-இல் கண்ட வழிகாட்டி நெறிமுறையின்படி பார்வை 4-இல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழக்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சங்கராபுரம் ஊராட்சி, கழனிவாசல் கிராமம், நில அளவை எண்:79/2A-இல் 28150.00சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (A.VR.A Residency) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு அம்மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ.வ.மு/நஊதுஇ(சிம)எண்:15/2018** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (in principle approval) வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு | - | 28150.00சமீ (6.95 ஏக்கர்) |
| மொத்த மனைகள் | - | 135 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | - | 89 |
| பூங்காவாக மாற்றப்பட்ட மனைகள் | - | 04 |
| சாலை ஒதுக்கீடு செய்த மனைகள் | | 02 |
| எஞ்சிய விற்கப்படாத மனைகள் | - | 40 |
| பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பரப்பளவு | - | 711.58சமீ (10.82%) |

AL-[illegible]

PR. Sivagami

PR. Alagu Sundaram

95

நிபந்தனைகள்:

1. பார்வை 1 மற்றும் 2-இல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளபடி மேற்படி மனைப்பிரிவில் விற்பனை செய்யப்பட்ட மனை எண்:46-க்கு ரூ.23000/-(ரூபாய் இருபத்து மூவாயிரம் மட்டும்) கூராய்வு கட்டணம் (Secrutiny Fees) தனியாக பெறப்பட்டுள்ளது. இதர மனைகளுக்கும் கூராய்வு கட்டணம் www.tnlayoutreg.in என்ற இணையதளத்தில் மனை ஒன்றுக்கு ரூபாய் ரூ.500/- வீதம் செலுத்தப்பட்ட இரசீதினை பெற்றுக்கொண்டு வரன் முறைப்படுத்தப்பட வேண்டும்.

2. வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் கீழ்க்கண்ட அரசு கணக்கில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை மண்டல அலுவலகத்தில் கீழ்க்காணும் தலைப்பினை ஊர்ஜிதம் செய்தபின் கருவூலத்தில் தொகை செலுத்தப்பட வேண்டும்.

**Regularisation Charges Head of Account:**
0217 - Urban Development 60 - Other Urban Development Schemes
800 - Other receipts AT-Receipt under Regularisation charges of Unapproved layouts and plots DTCP
**(DPC: 0217-60-800-AT-0007)**

3. வளர்ச்சிக் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. தொகைகள் மற்றும் கட்டணங்கள் செலுத்துவதற்கான கேட்பு அறிவிப்பு பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரர் கேட்பு அறிவிப்பின்படி கேட்பு அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அனைத்துத் தொகைகள் மற்றும் கட்டணங்களை தகுதி வாய்ந்த அதிகாரியிடம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் கட்டணங்கள் செலுத்தப்படாவிடில் காலதாமத காலத்திற்கு, ஆண்டொன்றுக்கு 6 சதவிகித வட்டி வசூலிக்கப்படும். மேற்சொன்ன கேட்பு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 90 நாட்களுக்குள் கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட வேண்டும்.

5. மனைப்பிரிவில் கண்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய வேண்டும் அல்லது உள்ளாட்சி சாலைகளாக ஏற்றெடுக்க ஊராட்சி சட்ட விதிகளின் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

6. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

AL. [signature]
PR. Sivagami
PR. Alagu Sundaram

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

விண்ணப்பத்தாரர் மேற்கொண்டு வட்டார வளர்ச்சி அலுவலர், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம் அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

வரன்முறைப்படுத்திய மனைப்பிரிவின் நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச்சான்று அனுப்புமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும், மேற்படி வரன்முறைப்படுத்திய மனைப்பிரிவு வரைபடத்தினை தங்களது அலுவலக விளம்பர பலகையில் பெரிதுபடுத்தி ஒட்டி பொதுமக்களுக்கு விளம்பரபடுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

இணைப்பு:
1. இரண்டு தொகுப்பு வரைபடங்கள்
2. அரசு ஆணை எண்: 78 மற்றும் 172-இன் நகல்.

பெறுநர்:
வட்டார வளர்ச்சி அலுவலர்,
சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.

நகல்:
1. நகர் ஊரமைப்பு ஆணையர்,
807, அண்ணாசாலை,
சென்னை-2 அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2. ஊராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
சிவகங்கை மாவட்டம். — வரைபடத்துடன்

3. உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
சிவகங்கை மாவட்டம். — சாலை பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.

4. வட்டாட்சியர்,
காரைக்குடி.

5. சார்பதிவாளர்,
காரைக்குடி,
சார்பதிவாளர் அலுவலகம்-II — சாலை பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

6. தொழில்நுட்ப வைப்பறை.

7. திருமதி. V. மரகதவள்ளி,
க/பெ R. வீரப்பன்,
3/728, ஓ.சிறுவயல் ரோடு,
காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம்.

AL.Raj... 

PR.Sivagami

PR.Alagu Sundaram